**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை.**

**முன்னிலை:- திரு. பா. பாலமுருகன், B.Com., B.L.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை,**

**2022 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15 ம் நாள் சனிக்கிழமை**

**I.A.No. 03/2022 In O.S.No. 209/16**

பொம்மக்காள் மற்றும் 9 நபர்கள்

..... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்1,3 முதல் 6

**/எதிர்/**

பாக்கியராஜ் .... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு என் முன்பாக 13.10.2022 ம் தேதியன்று விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. R.M. சிவக்குமார் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/ வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.R. கிருஷ்ணசாமி அவர்கள் முன்னிலையாகியும் எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## ஆணையுரை

அசல் வழக்கு விசாரணையை மறுதிறப்பு செய்யக்கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு-151 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6 ம் மனுதாரர் /6 ம் பிரதிவாதி தரப்பு மனுவின் சுருக்கம்**

1. அசல் வழக்கானது வா.சா1ன் குறுக்கு விசாரணைக்காக 20.07.2022 ம் தேதியன்று போடப்பட்டுள்ளது. அந்த தேதியில் மனுதாரரால் ஆஜராக முடியவில்லை. நோய்வாய்பட்டு, சின்னம்மை நோய் காரணமாக படுக்கையில் இருந்ததாலும், தனது செல்போனை தொலைத்துவிட்டதாலும் வழக்கறிஞருடன் தொடர்பு கொள்ள முடியவில்லை. மேற்கண்ட காரணங்களால் 20.07.2022 அன்று தன்னால் ஆஜராக முடியவில்லை என்றும், தன்னிடம் சரியான வழக்கு இருப்பதாகவும், தனது தரப்பில் குறுக்கு விசாரணைக்காக வா.சா1 ஐ மீண்டும் அழைக்கப்படவேண்டும் என்றும், இதே பிரச்சனை தொடர்பாக மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் ஒரு ரிட் மனு நிலுவையில் உள்ளது என்றும், மேற்படி ரிட் மனுவை தாக்கல் செய்த பின்னர் தாவா வழக்கு

தாக்கல் செய்யப்பட்டது எனவும், வழக்கு தொடர்பான ஆவணங்கள் மற்றும் சொத்து தொடர்பான பட்டா ஆகியவை பிரதிவாதியால் உருவாக்கப்பட்டது எனவும், வா.சா.1 ன் குறுக்கு விசாரணைக்காக வழக்கானது மறுதிறப்பு செய்யப்படாவிட்டால் தனக்கு கடுமையான இழப்பு ஏற்படும் என்றும், எனவே இம்மனுவை ஏற்று மேற்படி வழக்கில் வா.சா.1 ஐ மறுதிறப்பு செய்ய வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**<u>எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை ஆட்சேபனையின் சுருக்கம்</u>**

2. மனுதாரர் மனு சரியல்ல. இந்த வழக்கில் மனுதாரர்களுக்குப் பல வாய்தாக்கள் கொடுக்கப்பட்டு வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. ஏதோ ரிட் மனு இந்த வழக்கு சம்பந்தமாக நிலுவையில் உள்ளது என்பது சரியல்ல. இந்த வழக்கு ரிட் மனு நிலுவையில் உள்ள போது தாக்கல் செய்யப்பட்டது என்பது சரியல்ல. இந்த வழக்கிற்கும் ரிட் மனுவிற்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது. இந்த மனுவை வேண்டுமென வழக்கு நடவடிக்கைகளை காலம் கடத்தவே தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

3. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியமோ, சான்றாவணமோ முன்னிடப்படவில்லை.

4. தற்போது தீர்மானம் செய்யப்பட வேண்டியது, இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

5. தாவா அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா வழக்கானது வாதி தரப்பு கூடுதல் சாட்சியத்திற்காக ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில் வாதிகளின் வழக்கை நிரூபிக்க வா.சா1 ஐ குறுக்கு விசாரணை செய்ய வழக்கினை மறுதிறப்பு செய்ய வேண்டுமென்று மனுதாரர் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கானது வாதி தரப்பு கூடுதல் சாட்சியத்திற்காக ஒத்தி வைக்கப்பட்ட நிலையில் மனுதாரர் தரப்பில் தற்போது மீண்டும் வழக்கை மறுதிறப்பு செய்யக்கோருவது ஏற்புடையதல்ல என்றும், வழக்கு நடவடிக்கைகளை காலம் கடத்தவே இம்மனு

தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபனை முன் வைக்கப்பட்டது. வா.சா1 முதல் விசாரணை சாட்சியம் 16.03.2020 ம் தேதி முடிக்கப்பட்டு வா.சா1ன் குறுக்கு விசாரணைக்காக வழக்கானது நிலுவையில் இருந்து வந்த நிலையில் வழக்குரையில் திருத்தம் மேற்கொண்டும் மீண்டும் 30.03.2021 முதல் வா.சா1ன் குறுக்கு விசாரணைக்காக இருந்த நிலையில் வா.சா1 குறுக்கு விசாரணைக்காக நீதிமன்றத்தில் ஆஜராகி இருந்த நிலையிலும் மனுதாரர் தரப்பில் பலமுறை கால அவகாசம் கேட்டும், கால அவகாசம் வழங்கப்பட்டும் உள்ள நிலையில் மேற்கொண்டும் வா.சா1 ஐ குறுக்கு விசாரணை செய்ய மனுதாரர் தரப்பில் முன் வராத காரணத்தால் 20.07.2022 ம் தேதி வா.சா1ன் குறுக்கு விசாரணை முடித்துக் கொள்ளப்பட்டது. இவ்வழக்கானது கடந்த 2016 ம் ஆண்டு முதல் நிலுவையில் இருந்து வருவதை கவனத்தில் கொண்டும் மீண்டும் மனுதாரருக்கு ஒரு வாய்ப்பினை வழங்கும் பொருட்டும் நீதியின் நலன் கருதி இம்மனுவை செலவுத்தொகையுடன் அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

<u>முடிவாக,</u>

மனுதாரர்கள் வாதிக்கு செலவுத்தொகையாக ரூ. 500/- ஐ 20.10.2022 ம் தேதிக்குள் வழங்க வேண்டும் என்றும், வா.சா1 நீதிமன்றத்தில் முன்னிலையாகும் தினத்தில் மனுதாரர் தரப்பில் வா.சா1 ஐ குறுக்கு விசாரணை செய்து முடிக்கப்பட வேண்டும் என்றும், தவறும் பட்சத்தில் இம்மனு தானாகவே தள்ளுபடி ஆகும் என்ற நிபந்தனையுடன் இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2022 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15 நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/- P.பாலமுருகன்

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**குளித்தலை.**

| | | |
|---|---|---|
| **மனுதாரர்கள் தரப்பு சாட்சி** | - | இல்லை |
| **மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்** | - | இல்லை |
| **எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி** | - | இல்லை |
| **எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்** | - | இல்லை |

Sd/- P.பாலமுருகன்

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**குளித்தலை.**